**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE SPECIAL SUB JUDGE,**
**TO DEAL WITH MCOP CASES, TIRUVANNAMALAI.**
**M.C.O.P.No: 407 /2020**

**20.01.2026 – ம.சா.1 திரு.குமார் த/பெ ரேணு சத்திய பிரமாணத்தின் பேரில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

17.07.2020 அன்று மதியம் 12.30 மணியளவில் கடம்பை ஓம்சக்தி கோவில் அருகில் விபத்து நிகழ்ந்தது. விபத்து சமயத்தில் நான் Splendor pro இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றேன். இருசக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. இருந்தது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தொலைந்துவிட்டது. அதன் நகலை பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து நிகழ்ந்த சாலை திருவண்ணாமலை – திண்டிவனம் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். அந்த சாலையில் வாகனங்கள் செல்வதற்கும் வருவதற்கும் தனித்தனி பிரிவாக உள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்றேன் என்றால் சரிதான். என் பின்னால் வந்த வாகனம் என்மீது மோதி விபத்து நிகழ்ந்தது. என் பின்னால் வந்த வாகனம் எவ்விதம் வந்தது எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சாலையின் நடுவில் விபத்து சமயத்தில் சென்றேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ சமயத்தில் எவ்வித சைகையும் செய்யாமல் சாலையின் இடதுபுறத்தில் இருந்து வலது புறத்திற்கு சென்றதால் விபத்து நிகழ்ந்தது என்றால் சரியல்ல. என்னுடைய கவனக்குறைவால் விபத்து நிகழ்ந்ததால், 2ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. விபத்தில் பின்னர் திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். அதன்பின்னர் சென்னை மியாட் மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்கு சேர்ந்தேன். என் சுய விருப்பத்தின் பேரில் தான் மியாட் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரியல்ல. திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை பரிந்துரைத்ததின் பேரில் தான் சென்னை மியாட் மருத்துவமனைக்கு சென்றேன். நான் தாக்கல் செய்துள்ள திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஆவணங்களில் அவ்விதம் மியாட் மருத்துவமனைக்கு பரிந்துரைத்ததாக குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். சென்னை மியாட் மருத்துவமனையில் உள்ள மருத்துவ வசதி சென்னை இராயப்பேட்டை, சென்னை ராஜீவ்காந்தி மருத்துவமனைகளில் உள்ள நிலையில், நான் அங்கு சிகிச்சை பெறவில்லை என்றால் சரிதான். நான் சென்னை மியாட் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கு ரூ.5,82,084/– செலவானது. அதில் ரூ.3,88,406/–ஐ மருத்துவ

காப்பீட்டு திட்டம் மூலம் செலுத்தினேன் என்றால் சரிதான். மீது தொகை ரூ.1,93,678/—ஐ நான் ரொக்கமாக செலுத்தினேன். மேற்படி தொகையை நான் என் பணியிடம் மூலம் திரும்ப பெற்றுவிட்டேன் என்றால் சரியல்ல. சென்னை மியாட் மருத்துவமனையில் எவ்வளவு தொகை எனக்கு செலவானது என்பது தொடர்பாகவும் அதில் நான் எவ்வளவு செலுத்தினேன் என்பது சம்பந்தமாகவும் நான் அந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றது சம்பந்தமாகவும் அந்த மருத்துவமனை மருத்துவரையோ நிர்வாகத்தையோ விசாரித்து நிருபிக்கவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் நான் மேற்படி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தால் நான் அந்த மருத்துவமனை நிர்வாகத்தினரை விசாரித்திருப்பேன் என்றால் விசாரிக்க உள்ளேன். விபத்து சமயத்திலும் தற்போதும் நான் தமிழ்நாடு மின்சார வாரியம், உதவி மின்பொறியாளர் அலுவலகம் கீழ்பென்னாத்தூரில் வணிக ஆய்வாளராக பணிபுரிகிறேன். விபத்தின் பின்னர் நான் சிகிச்சை பெற்ற காலத்தில் மருத்துவ விடுப்பு எடுத்துக்கொண்டேன் என்றும் அதனால் அந்த சமயத்தில் எனக்கு முழு ஊதியம் கிடைக்கப்பெற்றது என்றால் சரியல்ல. தமிழ்நாடு அரசு பணியாளர் விதிமுறைகளின் படி மருத்துவ விடுப்பில் இருக்கும் பணியாளருக்கு முழு ஊதியமும் வழங்கப்படும் என்றால் சரிதான். 17.07.2020 முதல் 30.12.2020 வரை மூன்று முறையாக நான் மருத்துவ விடுப்பு எடுத்தேன். அதன் பின்னர் நான் மீண்டும் பணியில் சேர்ந்துவிட்டேன். ஜுலை 2020 முதல் இதுநாள் வரை நான் தொடர்ந்து மாத சம்பளம் பெற்று வருகிறேன் என்றால் சரிதான். விபத்தின் பின்னர் எனக்கு வலது காலில் ஊனம் ஏற்பட்டதால் நான் விபத்தின் பின்னர் அதற்காக சிறப்பு படி ஊதியத்துடன் பெறுகிறேன். நான் வணிக உதவியாளராக பணிபுரிந்ததால் புதிதாக மின் இணைப்பு கோரும் கட்டிடங்களை நேரில் ஆய்வு செய்து அலுவலகத்திற்கு அறிக்கை கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். விபத்தில் எனக்கு காலில் ஊனம் ஏற்பட்டதால் எங்கள் நிர்வாகத்தில் சிறப்பு சலுகையாக அலுவலகத்தில் பார்க்கும் பணி வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தினால் எனக்கு வருமான இழப்போ வேலையில் பாதிப்போ ஏற்படவில்லை என்றால் சரிதான். ஆனால் உடலில் நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது. அதனால் பதவி உயர்வும் நிறுத்தப்பட்டுள்ளது. நான் கள உதவியாளராக பணியில் சேர்ந்தேன். இன்னும் ஏழு வருடங்கள் எனக்கு பணிக்காலம் உள்ளது. நான் ITI முடித்திருப்பதால் கள உதவியாளருக்கு அடுத்து line man, Foreman, J.Eஆக பதவி உயர்வு பெற்றிருக்க வேண்டும் என்றும் நான் என் விருப்பத்தை எழுதிக்கொடுத்ததின் பேரில் வணிக உதவியாளராக பதவி உயர்வுபெற்றுள்ளேன் என்றால் சரிதான். இதன்பின்னிட்டு வணிக ஆய்வாளர், போர்மேன், ஜே.ஈ ஆக பதவி உயர்வு பெறமுடியும் என்றால், எனக்கு இனிமேல் பதவி உயர்வு

கிடைக்காது என்று நிர்வாகத்தில் தெரிவித்துவிட்டனர். நான் வணிக உதவியாளரில் இருந்து வணிக ஆய்வாளராக பதவி உயர்வு பெறவேண்டுமெனில் எங்கள் நிர்வாகத்தில் தயார் செய்யப்படும் panel listல் என் பெயர் இருக்கவேண்டும் என்றும் அவ்விதம் என் பெயர் அந்த லிஸ்டில் என் பெயர் இல்லை என்றால் சரிதான். பதவி உயர்வு பெறுவதற்கு எனக்கு தகுதி இல்லை என்றும், விபத்தின் காரணமாக எனக்கு பதவி உயர்வு கிடைக்காது என்று வழக்கிற்காக தவறாக தெரிவிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய பணி மற்றும் ஊதியம் தொடர்பான ஆவணங்கள் எதனையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளை தாக்கல் செய்தால் யார் விபத்திற்கு காரணம் என்று தெரியவரும் என்பதால் தான் அவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் மீது மோதியதாக சொல்லும் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லையென்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. முறையான ஓட்டுநர் உரிமம் இன்றி விபத்து ஏற்படுத்தியது 2ம் எதிர்மனுதாரர் நிறுவன விதிகளுக்கு முரணானது என்றும். அதனால் 2ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு இழப்பீடு கிடைக்க வேண்டுமெனில் அதனை 1ம் எதிர்மனுதாரர் தான் கொடுக்க கடமைப்பட்டவர் என்றும், 2ம் எதிர்மனுதாரை பொறுத்து இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.4 முதல் ம.சா.ஆ.11 வரையான ஆவணங்களை இவ்வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களை சம்பந்தபட்ட நபர்களை விசாரித்து நிருபிக்க தவறிவிட்டேன் என்றால் சரியல்ல. எவ்வித முகாந்திரமும் இன்றி தவறான அடிப்படையில் 2ம் எதிர்மனுதாரர் மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரிபார்க்கப்பட்டது.**

R KARPAGAVALLI

Digitally signed by R KARPAGAVALLI
Date: 2026.01.20 18:38:36 +0530

**சிறப்பு சார்பு நீதிபதி,**
**(மோட்டார் வாகன விபத்து வழக்குகள்),**
**திருவண்ணாமலை.**